


# உங்களுக்கு உரிமைகள்உள்ளன!

## குடியேற்ற அந்தஸ்த்தைப் பொருட்படுத்தாமல், **பின்வருவதற்கு உங்களுக்கு உரிமை உண்டு:**

- பயிற்சிக் காலகட்டங்கள் உட்பட, அனைத்து மணிநேர வேலைக்கும் ஊதியம் பெறுவது
- குறைந்தபட்ச ஊதியம் பெறுவது, அதிக நேர வேலைக்கு ஊதியம் பெறுவது மற்றும் வழக்கமாக ஊதியம் பெறுவது (பொதுவாக வாராந்த அல்லது இரு வாரங்களுக்குள்)
- உங்கள் ஊதியப் பிடித்தங்கள் பற்றி அறிந்துகொள்வது, எழுத்துமூல முன் அனுமதியின்றி ஒருபோதும் பணம் பிடித்தம் செய்யப்படாதிருப்பது
- பாகுபாடு, பாலியல் துன்புறுத்தல் மற்றும் தவறான பயன்பாடு ஆகியவற்றின் பாதிப்பு இல்லாத பாதுகாப்பான சூழலில் வேலை செய்வது
- பழிவாங்கல் பயம் இல்லாமல் NYS தொழிலாளர் துறையின் உதவியைக் கோருவது

## உங்களை நீங்களே பாதுகாத்திடுவீர்! **இதன்பதிவை வைத்திருங்கள்:**

- நீங்கள் பணியாற்றிய நாட்கள் மற்றும் மணி நேரங்கள்
- நீங்கள் எவ்வளவு ஊதியம் பெற்றீர்கள் மற்றும் எப்போது
- வேலைகளின்போது (காயங்கள், அச்சுறுத்தல்கள் அல்லது முரண்பாடுகள்) பற்றிய முக்கிய நிகழ்வுகளின் தேதிகள் மற்றும் நேரங்கள்







# கட்டாய வேலைவாங்குதல் ஒரு குற்றமாகும்!

## பின்வருமாறு இருப்பின், அது தண்டனைக்குரிய உரிமை மீறலாகும்:

- கடனை அடைப்பதற்காக நீங்கள் வேலை செய்ய வேண்டும் என்று உங்களிடம் சொல்லப்படுவது
- உங்கள் பாஸ்போர்ட்டை அல்லது ஐடி-ஐ உங்கள் முதலாளி எடுத்துக்கொள்வார் என்று உங்களிடம் சொல்லப்படுவது
- கிரீன் கார்டு அல்லது பணம் போன்ற நீங்கள் பெறாத பயன்களைப் பெறுவீர்கள் என்று உறுதியளிக்கப்படுவது
- நீங்கள் வேலை செய்யாவிட்டால் குடியேற்றம் அல்லது போலீஸ் வரவழைக்கப்படுவார்கள் என்று அச்சுறுத்தப்படுவது
- உங்களுக்கு அல்லது உங்கள் குடும்பத்தினருக்குத் தீங்கிழைக்கப்படும் என்று அச்சுறுத்தப்படுவது
- உங்களுக்கு உண்மையில் தீங்கிழைக்கப்படுவது, அல்லது ஒரு குடும்ப உறுப்பினருக்கு தீங்கிழைக்கப்படுவது

உங்களுடைய உரிமைகள் பற்றியும், என்ன உதவி கிடைக்கிறது என்பதைப் பற்றியும் மேலும் தகவல்களைப் பெறுவதற்கு, தேசிய மனித ஆட்கடத்தல் துறையை **888.373.7888** எனும் 24 மணிநேர ஹாட்லைனில் அல்லது **877.466.9757** எனும் DIPA ஹாட்லைனில் அழைக்கவும்.

நீங்கள் **trafficking@labor.ny.gov** -க்கு மின்னஞ்சல் அனுப்பலாம் அல்லது **917.692.7215**-க்கு உரைச்செய்தி அனுப்பலாம்.

NEW YORK STATE OF OPPORTUNITY.
Department of Labor
Division of Immigrant Policies & Affairs

**888.469.7365 | www.labor.ny.gov | @nyslabor**

நியூயார்க் ஸ்டேட் தொழிலாளர் துறை ஒரு சம வாய்ப்பு பணிவழங்குபவர் / திட்டம். ஊனமுற்றோருக்கு, வேண்டுகோளின் பேரில் துணைக் கருவிகள் மற்றும் சேவைகள் கிடைக்கின்றன.